# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

8069837

C

1. District மாவட்டம் : DVAC | PS காவல்நிலையம்: DVAC, HQS, Chennai | Year ஆண்டு 2020 | FIR No மு.த.அ. எண் 08 | Date நாள் 17.09.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7.
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 29.08.2020 | Date to : நாள் வரை 17.09.2020
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 1530hrs | Time to : நேரம் வரை 1200hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.09.2020 | Time நேரம் : 1500hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் : 1700hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Pooja Departmental Stores
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் No: 208, N.C.R.D Complex
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Opp. to Co-operative Park Thiruverkadu, Chennai - 600077 18 km, North.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் H. Mohan | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Harikrishnan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி No; 253, U Block, Boopathy Nagar 1st Street, Kodambakkam Chennai - 600024

m

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) K. Loganathan
   Food Safety Officer
   Food Safety and Drug, Admin, Department
   Thiruverkadu, Chennai - 600077

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

* GCP-240-34(Type-2) 90.000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Judy Abigail Rank Inspector to take ~~up~~ the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17/9/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
Judy
17/09/20

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Judy Abigail
Rank: நிலை .................. No. எண் ..........
Inspector of Police
SIU, DVAC.
Chennai.

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.08/2020 பிரிவு-7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12ன் தொடர்ச்சி பின்வருமாறு.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு, ஆய்வாளர் எஸ்.ஜுடி அபிகேயில் ஆகிய நான் இன்று 17.09.2020-ம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது சென்னை-24, கோடம்பாக்கம், பூபதி நகர், 'U' பிளாக், எண்.253 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.எச்.மோகன்,த/பெ.எம்.ஹரிகிருஷ்ணன் என்பவர் எனது அலுவலகம் ஆஜராகி கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து பூர்வமான புகார் மனு ஒன்றை என்னிடம் அளித்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு

அனுப்புநா்

எச்.மோகன்,
த/பெ.எம்.ஹரிகிருஷ்ணன்,
எண்.253, "U" பிளாக், பூபதி நகர்,
கோடம்பாக்கம், சென்னை-24.

பெறுநர்

உயர்திரு இன்ஸ்பெக்டர் அவர்கள்,
லஞ்ச ஒழிப்புத்துறை,
ஆலந்துார், சென்னை-16.

அய்யா,

நானும் எனது உடன் பிறந்த இளைய சகோதரி சத்தியப்ரியா என்பவரும் குடும்பத்துடன் எண்.253, "U" பிளாக், பூபதி நகர், கோடம்பாக்கம் சென்னை-24 என்ற விலாசத்தில் வசித்து வருகிறோம். நான் சென்னை-77, திருவேற்காடு, அறிஞர் அண்ணா சாலை, கோ ஆப்பிரட்டிவ் பார்க் எதிரில், என்.சி.ஆர்.டி.காம்பளக்ஸ், எண்.208 என்ற முகவரியில் பூஜா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் என்ற கடையை கடந்த 2 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். எனது சகோதரி சத்தியப்ரியா என்பவரும் அவரது கணவர் திரு.நந்தகோபால் என்பவரும் எண்.43பி, பத்மா தெரு, பெருமாள் அக்ரஹாரம், VGN மகாலட்சுமி நகர், திருவேற்காடு என்ற முகவரியில் செந்தில்முருகன் டிபார்ட்மெண்டல்

ஸ்டோர்ஸ் என்ற கடையை நடத்தி வருகிறார்கள். இரண்டிலும் மளிகை பொருட்கள், காய்கறி, இனிப்பு காரவகைகள் ஆகியவற்றை விற்பனை செய்து வருகிறோம். செந்தில்முருகன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் என்ற சூப்பர் மார்க்கெட் நடத்துவதற்கு திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையினரிடம் லைசென்ஸ் பெறுவதற்கு ஆன்லைனில் 18.05.2020ந் தேதி விண்ணப்பம் செய்தேன். அதற்கான விண்ணப்ப கட்டணம் ரூ.3,400/- PhonePe செயலி மூலம் செலுத்தினேன். 18.06.2020 அன்று எனக்கு FSSAI LICENCE நிறுவனத்திடமிருந்து பணம் பெற்று கொண்டமைக்கான ஒப்புதல் குறுஞ்செய்தி எனக்கு வந்தது (Invoice No.INV-011763). பின்னர் எனக்கு எந்த தகவலும் வரவில்லை.

இதற்கிடையில் கடந்த 29.08.2020ந் தேதி மதியம் சுமார் 3.30 மணியளவில் எனது பூஜா டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, அம்பத்தூர் வட்டம், உணவு பாதுகாப்பு அதிகாரி திரு.கே.லோகநாதன் என்பவர் நேரிடையாக வந்து என்னை சந்தித்து முன் அறிவிப்பு நோட்டீஸ் ஒன்றை என்னிடம் கொடுத்தார். நான் அவரிடம் விவரத்தை தெரிந்து கொண்டு லைசன்ஸ் பெறும் முறையை அவரிடம் கேட்டதற்கு அவர் எனது இரண்டு டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கும் அவரே ஏற்பாடு செய்து லைசென்ஸ் வாங்கி தருவதாகவும் அதற்கு கட்டணமாக ரூ.6000/-மும் தனக்கு தனியாக பணம் ரூ.10,000/- தருமாறு கேட்டார். அதற்கு நான் கட்டணமாக கேட்ட ரூ.6000/-த்தோடு கணிணி செலவு ரூ.1000/- சேர்த்து மொத்தம் ரூ.7000/-த்தையும் அவரிடம் கொடுத்து அத்துடன் எனது இரண்டு கடைகளுக்கான ஆவணங்களையும் ரெண்டல் அக்ரிமெண்ட், என்னுடைய மற்றும் எனது தங்கையின் ஆதார் அட்டைகளின் நகல் ஆகியவை உட்பட அவரிடம் அளித்தேன்.

அப்போது என்னிடம் அவர் தனியாக கேட்ட பணம் ரூ.10,000/- கையில் இல்லை என்பதை அவரிடம் கூறினேன். அப்போது அவர் பணம் இல்லாமல் லைசென்ஸ் வாங்கி தரமாட்டேன் என்று கூறினார். பூஜா டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு லைசென்ஸ் பெற விண்ணப்பம் செய்து கட்டணம் செலுத்தியதற்கான விவரத்தை 02.09.2020ந்தேதி எனக்கு

மேற்படி உணவு பாதுகாப்பு அதிகாரி வாட்ஸ்அப் மூலம் எனது செல்போனிற்கு அனுப்பினார். மேலும் அன்றே செந்தில்முருகன் டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கான லைசென்ஸ் தயார் செய்ததை எனக்கு வாட்ஸ்அப் மூலம் அனுப்பினார். அவருடைய வாட்ஸ்அப் எண்.9677280651 என்னுடைய வாட்ஸ்அப் எண்.7200676710 ஆகும். தொடர்ந்து மேற்படி லோகநாதன் அவர்கள் என்னை அவ்வப்போது செல்போனில் அழைத்து இலஞ்சம் கேட்டு கொண்டேயிருந்தார். இறுதியாக இன்று 17.09.2020 பகல் சுமார் 1200 மணியளவில் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு அவர் கேட்ட பணம் ரூ.10,000/-த்தை எடுத்து கொண்டு அவர் சொல்லும் இடத்திற்கு வந்து தருமாறும் அவ்வாறு தராவிட்டால் கடையை சீல் வைத்து விடுவேன் என்றும் மிரட்டினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. உணவு பாதுகாப்பு அதிகாரி லைசென்ஸ் கொடுப்பதற்கு லஞ்சம் கேட்கும் விவரத்தை எனது சகோதரி சத்யப்ரியாவிடம் தெரிவித்தேன் அவருக்கும் லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என தெரிவித்தார். என்னிடம் லஞ்சம் கேட்ட மேற்படி திரு.கே.லோகநாதன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு கொள்கிறேன்.

இப்படிக்கு
Sd/-எச்.மோகன்
(எச்.மோகன்)
17.09.2020

Sir, Received the complaint today (17.09.2020) at 15.00 hrs and the same was communicated to my higher officers and upon getting permission a quiet and discreet verification was made over the complaint. After satisfaction and getting permission from the higher authorities, a case in V&AC Hqrs.Cr.No.08/2020 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 was registered today (17.09.2020) at 16.00 hrs. and taken up for investigation

Sd/- S.JUDY ABIGAIL
17.09.2020
Inspector of Police
SIC, DVAC,
Chennai

INSPECTOR OF POLICE
Special Investigation Cell
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.